இறை நேசச் செல்வர்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)



செ.திவான்

இறை நேசச் செல்வர்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)

வரலாற்று ஆய்வாளர்

செ.திவான் எம்.ஏ., எம்.ஃபில்,

சுஹைனா பதிப்பகம்

106 F, 4 A, திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை.

தமிழ்நாடு

✆ *0462- 572665*

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 15, 2000.

ஆசிரியரின் 34 வது நூல்

உரிமை : ஆசிரியருக்கே

விலை : ரூபாய் ஐந்து

இறைநேசச் செல்வர்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)

அகிலத்திற்கோர் அருட்கொடையாகத் தோன்றியவர் அண்ணல் நபி முஹம்மது(ஸல்) ஆவார்கள். அவர்களின் வழித் தோன்றல்கள் புனித மதீன மாநகரில் வாழ்ந்து வந்தனர்.

'காஜியாக்கள்' என்னும் கூட்டத்தைச் சேர்ந்த 'பனூ உமையாக்கள்' இந்த வழித்தோன்றல்களுக்கு இழைத்த தாங்கிடமுடியாத கொடுமைகள் காரணமாக அங்கிருந்து அவர்கள் குடிபெயர்ந்தனர்; 'ஹலபு' என்னும் நகரில் குடியேறினார்கள்.

சிரியா

அக்காலத்தில் சிரியா, ஃபலஸ்தீன், ஜோர்தான், லெபனான் உள்ளிட்ட நாடுகள் சேர்ந்த ஐக்கிய நாட்டின் பெயர் 'ஷாம்' தேசம். இன்று அதன் பெரும் பகுதி சிரியாவில் ★ அமைந்துள்ளது. சிரியா நாட்டைச் சேர்ந்த 'ஹலப்' (அலப்போ) என்னும் நகரில் ஹிஜ்ரி 442 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் முதல் நாள் திங்கட் கிழமை காலையில் பிறந்தது ஓர் ஆண் குழந்தை...

ஹஸன் - ஹுஸைன்

அண்ணல் பிரான் முஹம்மது (ஸல்) அவர்களின் அருமை மகளார் பாத்திமா (ரலி). அவர்களது கணவர் வீரப்புலி ஹஸ்ரத் அலீ (ரலி). இவர்களுக்கு கண்ணின் மணிகளாகப் பிறந்தவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) ஆகியோர் ஆவர்.

செய்யது அலி ஹலபி (ரலி)

ஹஸரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் வமிசவழியினர் இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி), இமாம் ஜஃபருஸ்ஸாதிக் (ரலி), செய்யது அஹமது (ரலி), செய்யதுலஹீருத்தீன் (ரலி), செய்யது பஹாவுத்தீன் (ரலி), செய்யது அலிஹலபி (ரலி) ஆவார்கள்.

செய்யது வாஹித் (ரலி)

ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி), அவர்களின் வமிசவழியினர் ஹஸனுல் முஸன்னா (ரலி) செய்யது அப்துல்லாஹில்மஹ்று (ரலி), செய்யது அபுல்காஸிம் (ரலி), செய்யது யூசுப் (ரலி), செய்யது அபூசாலிஹ் (ரலி),

★ நபிகளாரின் பொன்மொழிகள், ஸஹீஹுல் புகாரி, ஐந்தாம்பாகம், ரஹ்மத் அறக்கட்டளை வெளியீடு, 1999, பக் A 76.

செய்யது ஆபீத் (ரலி), செய்யது முஹம்மது (ரலி), செய்யது வாஹித் (ரலி) ஆவார்கள்.

பதீயுத்தீன்

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) வழிவந்த அலிஹலபி (ரலி) அவர்களுக்கும், ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் வழிவந்த செய்யது வாஹித் (ரலி) அவர்களின் திருமகளார் பீபி ஹாஜிரா என்ற பாத்திமா அவர்களுக்கும் பிறந்த ஆண் குழந்தைதான் பதீயுத்தீன். ★ இந்தப் பதீயுத்தீன் யார்?

சுஜூது (சிர வணக்கம்)

'தீனில் நூதனமானவர்' என்ற பொருளைத் தாங்கிய பதீவுத்தீன் அவர்களுக்கு 'குன்யத்து', அபூதுறாப் என்ற பெயர்களும் உண்டு. தமது தாயாரின் வயிற்றிலிருந்து தமது நெற்றியைத் தரையில் வைத்து எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு சுஜூது என்னும் சிரவணக்கம் செய்த நிலையிலும், அவனது திருக்கலிமாவை ஓதியவர்களாகவும் வெளிவந்த குழந்தை பதீவுத்தீன் என்ற சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) என்னும் இறைநேசச் செல்வர் ஆவார்கள்.

இறைவனுக்கு நெருங்கியவர்

'வலி' என்ற அரபிச் சொல் பல கருத்துக்களில் வான்மறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சொல்லிற்குப் பல பொருள்கள் இருப்பினும் 'இறைவனுக்கு நெருங்கியவர்' என்ற பொருளிலும் அச்சொல் தித்திக்கும் திருமறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

அவ்லியாக்கள்

'வலி' 'ஒலி' என்பதற்கு நெருங்கியவர் என்பது பொதுப்பொருள் 'வலி' என்ற சொல்லின் பன்மைதான் அவ்லியா. இறைவனுக்கு நெருங்கியவர்களும், நெருக்கமானவர்களுமான உண்மை உத்தமர்களைத் தான் அவ்லியாக்கள் என்று அழைக்கிறோம் ★★

சைவ சமயத்தில் நாயன்மார்களும், வைணவ சமயத்தில் ஆழ்வார்களும், கிறிஸ்தவ சமயத்தில் புனிதர்களும் இருப்பதுபோல இஸ்லாமிய மார்க்கத்தில் இறையருள் பெற்ற அடியார்களை அவுலியாக்கள், வலிமார் என்று அழைக்கின்றனர். ★★★

★ ஆ.மு. செய்யது அப்துல்காதர், சிந்தாஷாஹ்மதார் (ரலி) அவர்கள் வாழ்க்கை வரலாறு, 1994, பக் 3.

★★ மௌலவி P. அபுல்கலாம் ஆலீம்இம்தாதீ, இறை நேசச்செல்வர்கள், ஏர்வாடி, 1990, பக் 9.

★★★ ஆ. சிவசுப்பிரமணியன், தர்கா இந்து முஸ்லிம் ஒற்றுமையின் சின்னம், பக் 3.

இறைவழிபாட்டிலேயே...

'அவ்லியா' என்பதற்கு மூமின்கள் தங்களது ஆத்மார்த்த நெருக்கத்தினால் ஈடேற்றமடைந்தவர்கள் என்பது கருத்து. ஏனெனில் அவர்கள் தங்கள் வணக்கத்தினால் அல்லாஹுதஆலாவினிடம் நெருங்கி இருக்கிறார்கள். இன்னும் அவனது ஞானத்திலேயே மூழ்கியிருக்கிறார்கள். எனவே

அவர்கள் காண்பதெல்லாம்

அவனது குத்ரத்தின் (சர்வ வல்லமை) ஆதாரங்களையே!

அவர்கள் செவியேற்பதெல்லாம் அவனது திருஷ்டாந்தங்களையே!

அவர்கள் பேசுவதெல்லாம் அல்லாஹ்வின் புகழையே!

அவர்கள் நடமாடினால் அது இறைவனின் ஊழியத்திலேயே!

அவர்கள் முயற்சி செய்தால் அது இறைவனது வழிபாட்டிலேயே' என்று மௌலானா அபுஸ் ஸஊது (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.★

''மண்ணும் விண்ணும் படைத்தாளும் மாபெரும் அல்லாஹ் இறையோனை
எண்ணந் தன்னில் எந்நாளும் ஏந்திச் சிறக்கும் எந்தல்களாம்
புண்ணியம் பொங்கும் வலிமாரின்'' ★★ அன்பை வேண்டி

உமறுப்புலவர் சீறாப்புராணம் கடவுள் வாழ்த்துப் படலத்தில் பாடியுள்ளார். ★★★

அல்லாஹ்வின் நல்லடியார் என்னும் அழியாத முத்திரையுடன் அண்ணல் பெருமானார் (ஸல்) அகமகிழ்ந்து அளித்திட்ட அருள் ஞான ஒளியேந்தி அகிலத்தை அலங்கரிக்கும் அற்புத விளக்குகளாம் ஆன்மிக அரசர்கள் ★★★★ குறித்து, பத்றுத்தீன் புலவர், முஹியித்தீன் புராணத்தில் ஒலி (இறைநேசர்) (மெஞ்ஞானி) ஒலியுல்லா (அல்லாஹ்வின் இறைநேசர்) ஔலியா என்ற சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். ★★★★★

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து...

அல்லாஹ்வின் கட்டளைகளையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளையும் சிரமேற் கொண்டு திருமறையாம் திருகுர்ஆனை வழிகோலாகப் பூண்டு, தீனுல் இஸ்லாம் என்னும் சன்மார்க்க (ஷரீஅத்)

★ உத்தமபாளையம் மௌலானா மௌலவீ S.S. முஹம்மது அப்துல் காதர் ஸாஹிபு, பாகவி, தப்ஸீறுல் ஹமீத் பீ, தப்ஸீரில் குர்ஆனில் மஜீத், மூன்றாம் பாகம், சென்னை, 1950, பக் 69, 70.

★★ தேங்கை. மு. ஷர்புத்தீன் மிஸ்பாஹியின் கவிதையிலிருந்து . . . .

★★★ சீறாப்புராணம், கடவுள் வாழ்த்துப் படலம் பாடல்கள் 16,17.

★★★★ ஏ.எம். ரஹ்மத்துல்லாஹ், கலிமாவே என் காதலியே, பக்.33.

★★★★★ எம்.எம். உவைஸ், தமிழிலக்கிய அறபுச்சொல் அகராதி, மதுரை, 1983, பக் 59, 60, 61.

நெறியில் நடந்து, தரீகத் (சூபி மார்க்கங்களுள் ஒன்று) ஹகீகத் (உண்மை) என்னும் மன்ஸில்களை செவ்வனே கடந்து, மஃரிபத் என்னும் சாஸ்வத பேரின்ப வீட்டை அடைந்து நித்திய ஜீவனைப் பெற்றவர்களே அவுலியாக்கள்.

உலக ஆசாபாசங்களில் சிக்காது, மன இச்சைக்கு அடிமையாகாது, தன்னை உணர்ந்து, தனது தலைவனையும் உணர்ந்து, மெஞ்ஞான இரகசிய அகமியத்தைத் தெரிந்து பரமானந்த நிலையை அடைந்தவர்கள் அவுலியாக்கள்.

உண்ண, உடுக்க, உறங்க, சுகிக்க, பிள்ளைகுட்டி பெற மாத்திரமே வெறுமனே மானிடம் படைக்கப் படவில்லை என்பதைத் தெள்ளத் தெரிந்து கடைத்தேறுவதற்காகப் பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து ஜெயசீலர்களாய் ஆனவர்களே அவுலியாக்கள்.

அல்லாஹ் ஒருவனையே தங்களின் இறைவனாக ஏற்று, அல்லும் பகலும் அனவரதமும் அவனையே தியானித்திருந்து, இமைப்பொழுதும் நெஞ்சிலிருந்து மறவாது இறைவனைப் போற்றியவர்கள் அவுலியாக்கள்.

அகத்தாலும் புறத்தாலும் அல்லாஹ்வை அஞ்சி, அடிபணிந்து, தக்வா (பக்தியுடன்) வணங்கி முழுப்பற்றையும் அவன்பால் செலுத்தியவர்கள் அவ்லியாக்கள்.

இத்தகைய உத்தம நல்லடியார்களுக்குத் தனது அருட்கடாட்சத்தால் அல்லாஹ் சிறந்த சன்மானங்களையும் அருட்பேறுகளையும் (மர்த்தபா) பதவிகளையும் அளித்து மகத்துவ மேதைகளாக்கினான். ஞானவானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அற்புத ஜோதி நட்சத்திரங்களான அவ்லியாக்களுக்கு அற்புத ஆற்றல்கள் புரியும் இயல்பையும் ஈந்தான்.

இரும்புத்துண்டு

ஒரு சாதாரண இரும்புத்துண்டை எடுத்துக் கொள்ளுங்கள். யாரும் அதைத் தொடலாம். எவ்வித உணர்ச்சியும் இராது அந்த இரும்புத்துண்டை சொற்பநேரம் அக்கினியில் போட்டு சூடேறச் செய்தால் அதன் நிறம் பழுப்பாகிவிடும். யாரும் அதைத் தீண்ட முடியாது. தொட்டல் கை கருகிவிடும். இரும்பு இரும்பாகத்தானிருக்கிறது. ஆனால் அதன் சுபாவம் அக்கினியின் சுபாவமாகி விடுகிறதல்லவா? இதேபோல் அச்சாதாரண இரும்பின் மீது காந்த சக்தியை செலுத்தினால் அதற்கு காந்த சக்தியுண்டாகி விடுகிறது. வயர் கம்பியை சாதாரணமாக இருக்கும்போது யாரும் தொடலாம். ஆனால் அந்த வயர் கம்பியால் மின்சார சக்தி பாய்ச்சப்பட்டால்

அலட்சியமாக தொட முடியாது; தொட்டால் உயிருக்கு ஆபத்து. இவ்வாறே தான் அல்லாஹ்வின் ஜலாலியத் என்ற நெருப்புத் தன்மையும், ஜமாலியத் என்ற காந்த சக்தியும்,' விலாயத் என்ற மின்சார சக்தியும் பெற்ற அவுலியாக்கள் முதலில் சாதாரணமானவர்களாயிருந்தாலும் அப்பால் அகத்திலும், புறத்திலும், சொல்லிலும் செயலிலும், பார்வையிலும், கேள்வியிலும் தனிப்பட்ட விசேஷ மகத்துவமும், மாண்பும், சிரேஷ்டமும், சக்தியும் பெற்ற அற்புத மஹான்களாகி விடுகிறார்கள்.★

எனவேதான் இத்தகைய இறைநேசர்களைப் பற்றி அல்லாஹ் திருமறையில் கூறுகிறான்.

'அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வுடைய (நேசர்களான) அவ்லியாக்கள் அவர்களின் மீது எவ்வித பயமும் இல்லை; இன்னும் அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்' ★★ (திருகுர்ஆன் 10 : 62)

(விசுவாசிகளே!) அல்லாஹ்வுக்குச் சொந்தமான நல்லடியார்களுக்கு நிச்சயமாக யாதொரு பயமுமில்லை; அவர்கள் துக்கிக்கவுமாட்டார்கள் என்பதை நீங்கள் (உறுதியாக) அறிந்துகொள்ளுங்கள். அவர்கள் (இறைவனை மெய்யாகவே) விசுவாசித்து (அவனுக்குப்) பயந்தும் நடந்து கொள்கின்றனர். இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும், அவர்களுக்கு நன்மாராயமுண்டு.★ (திருகுர் ஆன் 10 : 62, 63, 64)

''தெரிந்து கொள்ளுங்கள்! திண்ணமாக அல்லாஹ்வின் நேசர்களுக்கு எத்தகைய அச்சமும் இல்லை. அவர்கள் துயரப்படவும் மாட்டார்கள்.... அவர்களோ, நம்பிக்கை கொண்டு இறையச்சமுள்ள போக்கினை மேற்கொண்டிருந்தார்கள். இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் அவர்களுக்கு நற்பேறுகள் இருக்கின்றன''★★ (திருகுர் ஆன் 10 : 62, 63, 64)

★ ஹஸன், மும்மணிகள், காயல்பட்டினம், 1956, பக். 6

★★ குர்ஆன்தர்ஜமா; தமிழ் மொழி பெயர்ப்பு: மௌலானா M.அப்துல்வஹ்ஹாப், மௌலானாK.A. நிஜாமுத்தீன் மன்பயீ, மௌலானா ஹாபிள்R.K. அப்துல் காதிர் பாகவி, பக்217.

★★★ அல்லாமா ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி, மொழிபெயர்ப்பு, தர்ஜுமதுல்குர்ஆன் : 1986, பக் 257.

★★★★ திருகுர்ஆன், உர்தூ உரைமூலம், மௌலானா சையத் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) மொழிபெயர்ப்பாளர்கள் மௌலவி A. குத்புத்தீன் அஹ்மத் பாகவி, அஃப்ஸலுல் உலமா மௌலவி R. அப்துர் ரவூஃப்பாகவி. பக் 346.

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ ٱللَّهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ﴿٦٢﴾
ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَكَانُوا۟ يَتَّقُونَ ﴿٦٣﴾
لَهُمُ ٱلْبُشْرَىٰ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا وَفِى ٱلْءَاخِرَةِ ۚ لَا تَبْدِيلَ
لِكَلِمَٰتِ ٱللَّهِ ۚ ذَٰلِكَ هُوَ ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ﴿٦٤﴾

திருகுர்ஆன் 10:62-64

அவ்லியாக்கள் பற்றி அண்ணல் (ஸல்)

ஹஸ்ரத் சயீது இப்னு ஜுபைர் (ரலி) அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்) அவர்களிடம் அவ்லியாக்கள் யார்? என்று வினவியபோது, 'அவர்களைப் பார்த்தால் அல்லாஹுத் தஆலாவின் நினைவு வரும்' என்று கூறினார்கள்.★

அவ்லியாக்கள் 'மார்க்கத்தின் ஏவல், விலக்கல்களை சரிவர எடுத்து நடந்தவர்கள், அவர்களைப் பார்த்தால் அல்லாஹ்வின் ஞாபகம் வந்து விடுமே' என்று அருளினார்கள்.★★ அண்ணல் (ஸல்) அவர்கள்.

هم الذين يذكر الله برؤيتهم அதாவது அல்லாஹுத் தஆலாவின் ஒலிமார்களைப் பார்த்தால் அவர்கள் மூலமாக அல்லாஹுத் தஆலாவின் ஞாபகமுண்டாகி விடவேண்டும். இவ்விதமான ஞாபகத்தையூட்டக் கூடியவர்கள் தான் ஒலிமார்களாக இருக்க முடியும். ★★★

396 ஆண்டுகள்

இப்பூவுலகில் 396 ஆண்டுகள் வாழ்ந்து இவ்வுலகை விட்டு மறைந்த சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் ஆறு மாதக் குழந்தையாக இருந்தபோது ஹலபு நகரில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. எனவே தாய் தந்தையருடன் 'மிஸ்ரு' என்ற எகிப்து நாட்டை நோக்கி அவர்களது வாழ்க்கைப் பயணம் தொடர்ந்தது. இன்னல்களுக்கு இடையில், வழிப்பாதையில் உலர்ந்துபோன மாதுளை மரத்தின் அடியில் குழந்தை பதீயுத்தீனை விட்டு விட்டு தாய் தந்தையர் மிஸ்ரை' அடைந்தனர். நபி கிளுறு (அலை) அவர்கள் வனாந்தரத்திலிருந்த அக்குழந்தையைக் காப்பாற்றினார்கள். ஐந்து வயதை அடைந்ததும், வாலிபர் ஒருவர் பதீயுத்தீனின் கனவில் வந்து அவரது தாய் தந்தையர் குறித்த உண்மையை அவரிடம் உரைத்தார்;

★ மௌலவி M.A. ஷைகு ஹுஸைன் பாகவீ, அவ்லியாக்களின் அற்புத வாழ்க்கை, 1990, பக் 9.

★★ சி.கா. ஷேய்கு இப்ராஹிம் ஸாஹிப், தர்காக்களும் நூதன அனுஷ்டானங்களும், 1947, பக் 17. (தென்காசி முஸல்மான் ஆபிஸ் வெளியீடு)

★★★ முற்கூறிய 'தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனின் மஜீத்' பக் 71.

அதன்படியே ஐந்து வயதுப் பாலகர் பதீவுத்தீன் மிஸ்ரு நகரை அடைந்தார்; அங்கு தனது தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார்.

அதன்பின் பதீவுத்தீன் ஹஸ்ரத் ஹுஸைபதுஷ்ஷாமி (ரஹ்) எனும் பேராசிரியரிடம் கல்வி கற்றார்கள்.

அல்லாஹ்வின் வலி

பதீயுத்தீன் கல்வி பயில்வதற்காகச் செல்லும் போதெல்லாம் 'வழி விடுங்கள்! இவர் அல்லாஹ்வின் 'வலி'யாவார்' (அத்ரிகூ ஹாதா வலியுல்லாஹ்' என்று அசரீரி முழங்கும் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் பதினான்கு வயதிற்குள் வெளிப்படையான எல்லா கல்விகளையும் கற்றுச் சிறப்புற்று விளங்கினார்கள்.

ஒருநாள் அவர்களது கனவில் ஏந்தல் ஒருவர் 'பதீயுத்தீனே நீர் மக்கா மதீனா நகரங்களுக்குச் செல்வீராக' என்ற உத்திரவைச் சொல்லிவிட்டு மறைந்தார். தம் பெற்றோர்களிடம் இதுபற்றி விவரங்கூறி அவர்களது அனுமதி பெற்று மக்கா நோக்கி பயணமானார்கள் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி). ★

'கவாகிபுல் அன்வார் பீமனாகிபில் குத்பிஸிந்தாஷாஹ்மதார்' எனும் நூலில் இது குறித்து விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

மக்கமா நகரில் பதீவுத்தீன் தங்கியிருந்து இறை வழிபாட்டில் ஈடுபட்டார்கள். பின்னர் அங்கிருந்து மதீனா நகருக்குப் பயணமானார்கள்.

ஆன்மிக இரகசியங்கள்

அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் தாயிஃப் போரிலிருந்து திரும்புங்கால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை மட்டும் தனியே அழைத்து ஆன்மிக இரகசியங்களை எடுத்தோதினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அண்ணல் (ஸல்) அவர்களை அணுகி, 'நாயகமே! தாங்கள் அலீக்கு (ரலி) மட்டும் ஏதோ இரகசியத்தைக் கூறுகின்றீர்களா? என்று வினவியபொழுது, 'நான் அவருக்கு யாதொரு இரகசியத்தையும் போதிக்கவில்லை. அல்லாஹ்தான் போதித்தான்'' என்று இயம்பினர் அண்ணல் (ஸல்). ஆன்மீக இரகசியங்களை அண்ணல் (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களுக்கு மட்டும் அல்லாஹ்வின் ஆணைப்படி போதித்ததன் காரணமாக 'அனமதீனத்துல் இல்ம் வஅலிய்யுன் பாபுஹா' நான் அறிவென்னும் பட்டணம், அலீ அதன் வாயில் என்று நபிகள் (ஸல்) கூறினார்கள்.

★ அப்துற்-றஹீம், *வலிமார்கள் வரலாறு*, பாகம் 3, 1986, பக் 285.

ஆன்மிக அறிஞர்களின் பரம்பரை

அண்ணல் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து இவ்வுலகில் இஸ்லாத்தைப் பரப்பும் பணியில் மார்க்க அறிஞர்கள், ஆன்மிக அறிஞர்கள் என்று இருவகைப் பட்டவர்கள் ஈடுபட்டார்கள். ஆன்மிக அறிஞர்களின் பரம்பரை அலீ (ரலி) அவர்கள் முதல் துவங்குகிறது.★

மதீனாவில்

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அடக்கஸ்தலம் அமைந்துள்ள 'மஸ்ஜிதுன் நபவி'யினை பதீவுத்தீன் அடைந்தார்கள். நபிகள் பிரான் (ஸல்) மீது ஸலவாத்து (நபி புகழ்) ஓதினார்கள். பின்னர் அங்கு தங்கினார்கள். அன்று இரவில் அண்ணல் (ஸல்) அவர்களையும், ஆன்மிக அறிஞர்களின் பரம்பரையில் முதலானவருமான அலீ (ரலி) அவர்களையும் கனவில் கண்டார்கள்.

மதார்ஷா (சுற்றும் அரசர்)

அந்தக் கனவில் 'இவருக்கு ஆன்மிக அறிவினை நீர் வழங்கும்' என நபி (ஸல்) உரைத்தார்கள். உடனே அலீ (ரலி) அவர்கள் பதீவுத்தீனின் நெஞ்சினை தமது நெஞ்சோடு சேர்த்து அணைத்தார்கள். அக்கணமே ஆன்மிக அறிவுகள் அனைத்தும் தம்மில் நிறைவுற்றதாக பதீவுத்தீன் உணர்ந்தார்'★★

அதன்பின் 'நீர் ஹிந்துஸ்தான் சென்று அங்கு இஸ்லாமியமார்க்கப் போதனைகளைப் பரப்பிடுக' எனப் பணித்தார்கள். அவ்வாறே அவர்களும் இந்தியாவிற்குப் பயணமானார்கள். இதிலிருந்து மதார்ஷா (சுற்றும் அரசர்) என்ற பெயர் அவர்களுக்கு ஏற்பட்டது.

சிந்தா (நீடு வாழ்பவர்)

பின்னர் அவர்கள் உலகில் பல்லாண்டுகள் (396) வாழ்ந்ததால் சிந்தா (நீடு வாழ்பவர்) என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. அதன்பின்னர் பதீவுத்தீன் 'சிந்தா ஷெய்கு மதார் ஷா' (ஒலி) என்று அழைக்கப்படலானார்கள்'

உணவும் உடையும்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களுக்கு திருநபி (ஸல்) அவர்கள்

★ அப்துற்-றஹீம், வலிமார்கள் வரலாறு, முதற்பாகம், 1999, முன்னுரையில்

★★ ஆ.மு. செய்யது அப்துல் காதர், சிந்தா ஷாஹ் மதார் வரலாறு, பக் 9.10.

ஒன்பது பிடி உணவினை ஊட்டினார்கள்; உடலுக்கு ஒரு ஆடையையும் தலைக்கு தலைப்பாகையையும், முகத்தை மறைக்கும் படியாக ஒரு ஆடையையும் அணிவித்தார்கள். இதற்குப்பிறகு தமது ஜீவிய காலம் வரை உணவு, குடிப்பு எதுவும் இன்றி அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களது ஆடையும் அழுக்கு பற்றியதில்லை. இந்நிகழ்ச்சி பற்றி 'கவாகிபுல் அன்வார் பீமனாகில் குத்பி ஸிந்த ஷாஹ்மிதார்' என்னும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி கனவில் நடந்ததாகவும், விழிப்பு நிலையில் நடந்ததாகவும் இருவேறு கருத்துக்கள் உள்ளது.

கிள்ரு (அலை)

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் தமக்களிக்கப்பட்ட நற்பேறுகளுக்காக, அப்போது எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கு நன்றி செலுத்திட இரண்டு 'ரக் அத்' தொழுதார்கள். கிள்ரு (அலை) அங்கு தோன்றி இஸ்முல் அஃலத்தைக் (பெயர்களுள் சிறந்ததை- அல்லாஹ்வின் புகழை) கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் பாயஸீத் பிஸ்தாமீ (ரஹ்) அவர்களின் ஆன்மா தோன்றி தைபூரியா தர்க்காவில் அவர்களுக்கு தீட்சை வழங்கியது.

அஜ்மீர் மதார் சாஹிப்ஸரா

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அங்கிருந்து புறப்பட்டு அஜ்மீர் வந்தடைந்தார்கள். அங்கு கீழ்ப்பகுதியிலுள்ள ஒரு மலையின் அடிவாரத்தில் 'கோகலாபாடி' என்ற இடத்தில் தங்கி இறை வணக்கத்தில் ஈடுபட்டார்கள். அங்கு கட்டடம் எழுப்பப்பட்டு, அது 'மதார் சாஹிப்ஸரா' என்று அழைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஜமாதுல் அவ்வல் 18ஆம் நாள் உர்ஸ் (நினைவு நாள் விழா) நடைபெறுகிறது.

மார்க்கப் பிரச்சாரப் பயணங்கள்

அதன்பின் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் இந்தியாவில் 'குராஸான்' பட்டணத்திற்குப் பயணமானார்கள். அங்கு மார்க்கப் பிரச்சாரம் தொடர்ந்தது; பின்னர் அங்கிருந்து 'மாவராவுன்' என்னும் ஊரில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தார்கள்; அதனைத் தொடர்ந்து 'காபூல்' சென்றார்கள். இறைப்பணி அங்கிருந்து தொடர்ந்தது. 'காலபி' நகருக்குப் பயணஞ் செய்தார்கள். அங்கிருந்து சமன் என்னும் ஆற்றங்கரை ஓரத்தில் சென்று தங்கியிருந்தார்கள். அங்கிருந்து ஜவன்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அங்கிருந்து ஹஜ்ஜுச் செய்ய மக்கா சென்றார்கள். பின்னர் புனித ஹஜ் பயணம் முடித்துத் திரும்பினார்கள்.

இலட்சம் பேர் இஸ்லாத்தில்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் ஜவன்பூர் வந்தபொழுது அவர்களைச் சந்திக்க, அங்கு ஆட்சி செய்துவந்த சுல்தான் இப்ராஹிம் ஷர்கீயின் இளவல் அஷ்ரஃப்பும், அமைச்சர் ஸத்ரெரஜஹானும் வந்தனர். அவருடன் லட்சம் பேர்களும் வந்திருந்தனர். அமைச்சர் மட்டும் அவர்களது அறைக்குள் அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர்களது முகத்திரையை விலக்க, அவர்களது முகத்திலிருந்த வெளியான பேரொளியைப் பார்க்க இயலாது அமைச்சர் குப்புற வீழ்ந்தார். விக்கி விக்கி அழுதார்; அமைச்சரை சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் தேற்றி 'வெளியே சென்று அமரும். நாமும் அங்குக் கூடியிருக்கும் மக்களைச் சந்திப்பதற்காகச் சில நொடிகளில் வந்து சேர்கிறோம்' என்றார்கள். அவ்வாறே வெளியே வந்தார்கள்; நாற்காலியில் அமர்ந்து மக்களுக்கு அறிவுரை பகர்ந்தார்கள்; அன்றையத் தினமே அங்கு குழுமியிருந்த இலட்சம் மக்களும் அவர்களிடம் 'பைஅத்' (கீழ்படிதல் பற்றிய உறுதிமொழி) பெற்றனர்.★

ஜவன்பூர் ஜாமியா மஸ்ஜிதில்

சுல்தான் இப்ராஹீம் ஷர்கீயின் தலைநகரான ஜவன்பூரிலுள்ள ஜாமிஆ மஸ்ஜிதிற்குள் தொழுவதற்காக ஒருநாள் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) சென்றார்கள். இமாம் தொழுவதற்காகத் தக்பீர் (இறைவன் பெரியவன் எனும் அல்லாஹு அக்பர் எனும் சொற்றொடரை உச்சரித்தல்) சொன்னவுடன் தாமும் அவரைப் பின்பற்றி தக்பீர் கட்டினார்கள்; ஆனால் தொழாது திரும்பினார்கள். இதனை அறிந்ததும் அங்கு தொழுகையில் கலந்து கொண்ட மலிகுல் உலமா (நல்லறிஞர்) 'முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாகப் பள்ளிவாயில் வந்து தொழ வேண்டும் என்று தானே பள்ளி வாயில்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்குக் கூட்டுத் தொழுகை தொழுவது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்கூட்டுத் தொழுகையில் கலந்து தொழுவதற்காகப் பள்ளிவாயில் வந்த தாங்கள் அதில் கலந்து கொள்ளாது திரும்பிவிட்ட காரணம் என்ன? என்று வினவினார். அதற்கு அவர்கள் 'லா ஸலாத்த இல்லாபி ஹுளூரில் கல்பி' (மனம் ஒருமித்து ஈடுபடாத தொழுகை நிறைவுடையதாகாது) என்பதை தாங்கள் அறியாததல்ல; தக்பீர் கட்டும் நேரத்தில் கூட தொழ வைத்தவர் தம் மனத்தை அதில் பதிய வைக்கவில்லை என்பதால் அவரது பின்னே நின்று தொழவில்லை என்றார்கள். உடனே

★ அப்துற்-றஹீம், முற்கூறிய நூல் பக் 298.

தொழ வைத்தவரை அழைத்து அவரிடம் விசாரித்ததில், தொழ வைத்தவர் தக்பீர் கட்டும் போது தன் மனத்தில் தனது குதிரையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததை ஒப்புக்கொண்டார். 'சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களிடம் வந்து அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இபுறாகீம் ஷர்கீ பாதுஷா

ஜவன்பூர் மன்னன் இபுறாகீம் ஷர்கீ பாதுஷா சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களிடம் பைஅத்து பெற்றுக் கொண்டார். தன் வாழ்நாள் முழுவதும் நீங்கா அன்பு கொண்ட இவர் மறைந்தபின் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் அடக்கத்தலத்திற்கு கால்மாட்டு பகுதியில் அடக்கப் பட்டார்; என்பதிலிருந்து இவரது நெருங்கிய தொடர்பினை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

மக்கன்பூர் பயணம்

கன்னோஜ் நகரில் மக்கள் வாந்தி பேதியால் பெருமளவில் மடிகிறார்கள். தாங்கள் இறைவனிடம் இறைஞ்சி எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அங்குள்ள மக்களில் சிலர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களைச் சந்தித்து வேண்டினார்கள். உடனே அவர்கள் காஜி ஷஹாபுத்தீனை அழைத்து கன்னோஜ் செல்லப் பணித்தார்கள்; அங்கிருந்து அல்லாஹ்விடம் இறைஞ்சுமாறு உத்தரவிட்டார்கள். அதன்படி அந்த ஊரிலிருந்த வாந்தி, பேதி எனும் பிணி அகன்றது. இதன் பின்னர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) இறைவனின் நாட்டப்படி மக்கன்பூருக்குப் பயணமானார்கள். அங்கு அவர்கள் செல்லும் போது கொடிய பஞ்சம் தலைவிரித்தாடியது. எல்லாம் வல்ல இறைவனின் உதவியோடு அவைகளையும் நீக்கினார்கள்.

கஹாத்தம்பூர் காஜி மஹ்மூத்

மக்கன்பூரில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் 'கஹாத்தம்பூர்' சென்றார்கள். அங்குள்ள பிரபல உலமா காஜி மஹ்மூத் என்பவரிடம் சிறிய பிணக்கு ஏற்பட்டது; பின்னர் அது மன்னிக்கப்பட்டது. பிற்காலத்தில் அவர் ஒரு சிறந்த காமிலான (பரிபூரணம்) ஷெய்காக விளங்கவும், சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் தபகாதிய்யா தரீகா பல கிளைகளாகப் பிரிந்து நாடெங்கும் பரவவும் மூலகாரணமாக அவர் விளங்கினார். பின்னர் கஹாத்தம்பூர் அரசரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

இரண்டாம் முறை ஜவன்பூருக்கு

ஜவன்பூர் பாதுஷா இபுறாகீம் ஷர்க்கீ அவர்களின் அழைப்பை ஏற்று இரண்டாம் முறையாக ஜவன்பூருக்கு சிந்தா ஷெய்கு ம்தார் ஷா (ஒலி) பயணமானார்கள். அங்கே பல ஆண்டு காலம் தங்கியிருந்தார்கள். பல அற்புதங்களைச் செய்தார்கள். அதன் பின் மக்கன்பூருக்கு பயணமானார்கள்.

இறுதி நாட்கள்

மக்கன்பூரிலேயே தங்கியிருந்து இறைபணியை சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள்; பலர் அவர்களது போதனையை ஏற்று இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டே இருந்தார்கள்.

ஹிஜ்ரி 833 ஆம் ஆண்டு ஜமாதுல் அவ்வல் பிறை முதல் நாள் தாம் தங்கியிருந்த இடத்தில் சீடர்கள் அனைவரையும் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் அழைத்தார்கள். தாம் அவர்களை விட்டுப் பிரியும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதை அவர்களுக்கு அறிவித்தார்கள். சீடர்கள் இதனையறிந்து துயருற்றார்கள்.

ஷாஹ் யாசீன் சுனை

நாட்கள் நகர்ந்தன; சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் தங்கள் சீடர்களை அழைத்து, இந்த வார இறுதியில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருச் சமூகத்திற்கு செல்லவிருக்கிறேன். ஆதலின் நீங்கள் ஷாஹ் யாசீன்(ஷாஹே யாசின்) சுனையிலிருந்து புதுக் குடங்களில் தண்ணீர் எடுத்து வந்து தயாராக வைத்திருங்கள் என்று கூறினார்கள்.

இவ்வுலகை விட்டு மறைதல்

ஹிஜ்ரி 838 ஆம் ஆண்டு ஜமாசல் அவ்வல் பிறை 17 ஆம் நாள் தங்களின் தியான அறைக்குள் நுழைந்து ஷேக் சிர்தா மதார் ஷாஹ் (ரஹ்) அவர்கள் கதவை மூடிக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் இவ் உலகை விட்டு மறைந்தார்கள் (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹிராஜிஊன்) (அல்லாஹ்விடமிருந்து வந்தோம்.மேலும் அவனிடமே திரும்புவர்களாக இருக்கிறோம்)

அவர்களது விருப்பப்படி ஜவன்பூர் நிஜாமுத்தீனே அவர்களைக் குளிப்பாட்டி, கபனிட்டு, (ஒரு முஸ்லிமின் உயிர் பிரிந்த பின்னர் நல்லடக்கத்திற்காக அணியப்படும் சாதாரண வெள்ளாடை) தொழ வைத்து, நல்லடக்கம் செய்து வைத்தார். கான்பூரிலிருந்து 45 மைல் 72 கி.மீ தொலைவில் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட மக்கன்பூர் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜமாஅத்துல் அவ்வல் பிறை 17இல் உரூஸ் அங்கு சிறப்பாக நடைபெறுகிறது. சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் அடக்கவிடத்தின் மீது அவர்களின் முரீதுகளில் ஒருவரான இபுராஹிம் ஷர்கீ சிறிய கட்டடம் ஒன்றை எழுப்பியுள்ளார்கள்.

முகலாய மன்னர் ஹுமாயூன்

ஹிஜ்ரி 944 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் முதல் முகலாய மன்னர் ஹுமாயூனுக்கும் ஷேர்கானுக்கும் போர் நடைபெற்றது. போருக்குச் சில நாட்களுக்கு முன் ஹுமாயூனின் படை வீரர்கள் மக்கன்பூரில் அநியாயமாக கொள்ளையடித்தனர். கம்பளி உடையணிந்த லட்சம் பக்கீர்கள் பெரும் கழிகளுடன் வந்து ஷேர்கானின் படையோடு சேர்ந்தனர். ஹுமாயூன் படை தோற்றது.★ இதனையறிந்த ஹுமாயூன் வருத்தப்பட்டார். அடுத்த போரில் வெற்றி பெற்றால், சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் ஆசியோடு வெற்றி பெறுவேன்; அப்போது அங்கு சென்று ஜியாரத் (தரிசிக்கச் செல்லுதல்)செய்வேன்; சில கிராமங்களை மானியமாக வழங்குவேன் என்று எண்ணினார்; எண்ணம் நிறைவேறியது; அதன்படி எண்ணத்தை நிறைவேற்றவும் செய்தார்.

ஔரங்கஜேப்

பிற்காலத்தில் முகலாயப் பேரரசர் ஔரங்கஜேப் மக்கன்பூர் வந்தார். சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் அடக்கவிடத்தின் வாயில் எப்பொழுதும் பூட்டப்பட்டிருப்பதை அறிந்து அதன் பரிபாலகர்களின் அனுமதி பெற்று மக்கள் அவ்விடத்தை தரிசிக்க இயலும் வண்ணம் அதன் நான்கு புறங்களிலும் சன்னல்கள் அமைத்தார். அந்தச் சன்னல்களின் அருகேனின்றுதான் மக்கள் இன்றும் 'பாத்திஹா' ஓதி வருகிறார்கள். அதன் அருகில் பள்ளிவாசல் ஒன்றையும் நிர்மாணித்தார். ★★

★ KALIKARANJAN QANUNGO எழுதிய SHERSHAH AND HIS TIMES, என்ற 459 பக்கங்களைக் கொண்டு 1965ல் வெளியான நூலில் ஷெர்கான் என்ற ஷெர்ஷா போரில் பெற்ற பல வெற்றிகளையும், ஹுமாயூனின் தோல்விகளையும் பற்றி குறிப்பிட்டுள்ளதை கவனத்தில் கொள்க.

★ ★ PERCY BROWN, INDIAN ARCHITECTURE (ISLAMIC PERIOD) எனும் 1981ல் மறுபதிப்பு செய்யப்பட்ட 134 பக்கங்களைக் கொண்ட நூலில் 111, 112 பக்கங்களையும், கோ. தங்கவேலு, இந்தியக்கலை வரலாறு முதல் புத்தகம் 1976, 670-672 பக்கங்களையும் வாசிக்கிற போது ஔரங்கஜேப் தனது ஆட்சிக் காலத்தில் சில பள்ளிவாசல்களை நிர்மாணித்ததை கவனத்தில் கொள்க) மற்றும்
அப்துற்-றஹீம், வலிமார்கள் வரலாறு பாகம் 3, 1986, பக் 312.

1442 கலீபாக்கள்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் இவ்வுலகில் இருந்து மறையும் போது அவர்களுக்கு 1442 கலீபாக்களும் (அடுத்து வந்தவர்கள்) எண்ணற்ற மூரிதுகளும் (செய்கு என்னும் தலைவரை ஆன்மிக வழிகாட்டியைப் பின்பற்றும்) இருந்தனர்.

தம்மிடம் அல்லது தம் கலீபாக்களிடம் பைஅத் (கீழ்படிதல் பற்றிய உறுதிமொழி) பெறுபவர்களுக்குத் தாம் ஏழு தலைமுறை வரை பிணை நிற்பதாயும் உலகமுடிவு நாள் வரை தம் தரீக்கா (ஞானிகள் பாதை) பெருகிக் கொண்டே செல்லுமென்றும் அதில் பெரும் மகான்கள் தோன்றுவார்கள் என்றும் அவர்கள் கூறிச் சென்றதற்கேற்ப அவர்களின் தரீக்கா நாள்தோறும் பெருகிக் கொண்டே செல்கிறது.

ஹஸ்ரத் கலந்தர்ஷா தபகாத்தி (ரஹ்)

தமிழ்நாட்டில் சென்னை, சிவகாசி, கடையநல்லூர், களக்காடு, மேலப்பாளையம், ஆறாம்பண்ணை, பாளையங்கோட்டை, பொறையூர் இன்னும் பல இடங்களில் இந்த தரீகாவைச் சேர்ந்த கலீபாக்கள் அடக்கமாகியுள்ளனர். தூத்துக்குடி மாவட்டம் பொறையூரில் அடக்கமாகி இருக்கும் தபகாதிய்யா தரீகா கலீபாவின் உண்மையான பெயர் ஹஸ்ரத் கலந்தர்ஷா தபகாத்தி (ரஹ்) ஆவார்கள். பல சிந்தா தைக்காக்களில் அடக்கமாகியிருக்கும் கலீபாக்களின் பெயர்கள் தெளிவாகத் தெரியவில்லை. சாதாரணமாக இந்த தரீகாவைச்(ஞானிகள் பாதை) சேர்ந்த கலீபாக்கள் அடக்கமாகியிருக்கும் கபுறுஷரீபுகள் உள்ள தர்காக்களை சிந்தா தைக்கா என்றும் அடக்கமாகி இருப்பவர்களை சிந்தா ஆண்ட கை என்றும் பொதுமக்கள் சொல்லி வருகின்றனர்.★

கராமத் (அற்புதம்)

ஜின்களின் தலைவன் இமாத்துல் முல்க் மற்றும் மக்ஞ என்னும் ஜின் இஸ்லாத்தைத் தழுவியது, நவ்வாஹூ சூனியக்காரர்களைத் திருத்தியது, ரஹீம் பூர் சூனியக்காரர்களை விரட்டி மக்களைக் காத்தது, ஸத்ஹனில் துறவிகள் இஸ்லாத்தைத் தழுவியது, வணிகர்களின் கப்பல்களைக் காப்பாற்றியது, மாந்தீரிகர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய வைத்தது, குருடர்களுக்கு பார்வையளித்தது இதுபோன்ற எண்ணற்ற கராமத் (அற்புதங்களை) சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்களின் வாழ்க்கையில்

★ ஆ.மு. செய்யது அப்துல் காதர், முற்கூறிய் நூல், பக் 69.

நாம் காண முடிகிறது. அவர்கள் குறித்து மேலும் விவரங்களை அறிய விரும்புவர்கள் அவர்கள் மீது பாடப்பட்டுள்ள புகழ் பாக்களைப் படித்து தெரிந்து கொள்ளலாம்.

புகழ்பாக்கள்

சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் மீது அரபியில் **கஸீதா நூரிய்யா, கஸீதா ஹம்ஸிய்யா, கஸீதா மீமிய்யா, கஸீதா மதாரிய்யா, கஸீதா பத்ரிய்யா, கஸீதா ரிலாயிய்யா** என்ற புகழ்பாக்களை, **முஹம்மது அப்துல் ரஹ்மான் இப்னுஷ் ஷெய்கு காதர் மீறான் சாஹிப்** இயற்றியுள்ளார்.

சின்ன அஹ்மது முஹம்மது முஹியுத்தீன் ஆலிம் சாஹிப் அவர்களை கஸீதா பர்ரிய்யா என்பதை அரபியில் பாடியுள்ளார்.

பஸ்லும் உலமா என்பவர் கஸீதா ஷாகிறிய்யா, கஸீதா குதுபிய்யா, கஸீதா மத் ஹிய்யா ஆகியவற்றை அரபியில் பாடியுள்ளார்.

பதீவுத்தீன் முனாஜாத்

மேலப்பாளையம் மெஞ்ஞானி குன்யா அலி ஷெய்கு முஹியுத்தீன் இப்னு செய்யது முஹியுத்தீன் கலீபா தபகாத்தி அவர்கள் தமிழில் 155 ஆண்டுகளுக்கு முன் 'பதீவுத்தீன் முனா ஜாத்' (குறை இரங்கல் எனும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வடிவங்களில் ஒன்று) பாடியுள்ளார்.

மாப்பிள்ளை லெப்பை ஆலீம்

தரீகத்துல் இலாஹியா என்னும் தரீகாவை நிறுவிய கல்வத்து நாயகம் ஹஸ்ரத் செய்யது அப்துல் காதர் (ரஹ்) அவர்களின் தந்தையாராகிய மாப்பிளை லெப்பை ஆலீம் என்று அழைக்கப்படும் ஹஸ்ரத் செய்யது முஹம்மது (ரஹ்) அவர்கள் 'அல்கவாகிபுத். தாரியா' என்னும் பெயரில் மௌலூதை (புகழ்பாக்கள்) சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) அவர்கள் மீது இயற்றியுள்ளார்கள். இது 96 பக்கங்களைக் கொண்ட அரபி நூலாகும். பாளையங்கோட்டை பேருந்து நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி) தைக்காவில் இன்றளவும் பாடப்பட்டு வருகிறது.

★★★

வரலாற்று ஆய்வாளர் **செ. திவான்** எம்.ஏ., எம்.ஃபில்., எழுதிய

வரலாற்றின் வெளிச்சத்தில் **ஔரங்கஜேப்**

(மாமன்னர் ஔரங்கஜேப்பின் உண்மை வரலாற்று ஆய்வு நூல்)

524 பக்கங்கள் விலை ரூ.120

நூல் கிடைக்குமிடம் : சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

இனிப்புக்களில் ராஜா

RAJA
SWEETS

ராஜா
ஸ்வீட்ஸ்

எங்களது சார்பு நிறுவனங்கள்

ராஜா கட்பீஸ் செண்டர் : ராஜா கட்பீஸ் ஸ்டோர்ஸ்

ராஜா ரெடிமேட்ஸ் : ராஜா பேக்கரி (பாளை)

ராஜா கட்பீஸ் மேட்சிங் செண்டர்(டவுண்)

திருநெல்வேலி.

© 331712, 331713

ஹமீது பிரஸ், நெல்லை-6. © 333180